DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சஞ்சீவீ |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.07.2026**

**அரசு தரப்பில் BNSS பிரிவு 348 கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு CMP 812/2025 ல் அனுமதி செய்யப்பட்டதன் பேரில் சாட்சி அழைக்கப்பட்டு மீண்டும் விசாரணை**

**அரசு தரப்பில் விசாரணை**

1. நான் எதிரிக்கு எனது வங்கியில் இருந்து ரூபாய் 1 லட்சம் தொகையை வங்கியின் மூலமாக செலுத்தினேன். என்னிடம் காட்டப்படும் ரசீது தான் மேற்படி நான் எதிரிக்கு செலுத்திய ரசீது ஆகும். **(அந்த கனரா வங்கியின் சான்றிட்ட ரசீது நகல் எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நான் மேற்படி தொகையை நான் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி சென்னை கோட்டூர்புரம் கிளையின் கணக்கில் இருந்து எதிரிக்கு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வங்கி பரிவர்த்தனை மேற்படி நான் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி சென்னை கோட்டூர்புரம் கிளையின் பரிவர்த்தனை ஆகும். (**அந்த கனரா வங்கியின் பண பரிவத்தனை சான்றிட்ட நகல் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரிக்கும் போது மேற்படி அசாஆ 6 மற்றும் அசாஆ 7 ஆவணங்களை சமர்ப்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி ஆவணத்தை போலிசார் என்னிடம் வாங்கினார்களா என்றால் மேற்படி ஆவணங்களின் நகலை கொடுத்தேன். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணை மற்றும் எனது நீதி மன்ற முதல் விசாரணையில் மேற்படி ஆவணங்கள் குறித்து சொல்லவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக மேற்படி ஆவணங்களை நானே தயார் செய்து தற்போது சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் நான் மேற்படி ஆவணங்களை உண்மையில் கொடுத்திருந்தால் மேற்படி ஆவணங்களை போலிசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. மேற்படி அசாஆ 6 ல் உள்ள வங்கி கணக்கு எண் மற்றும் பெயர் எதிரியுடையது தான் என்பதற்காக ஆவணங்களை ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி பெயர் மற்றும் வங்கி கணக்கு எண் எதிரியுடையது தான். அவர் தான் மேற்படி விவரத்தை என்னிடம்

கொடுத்தார். மேற்படி வங்கி கணக்கு எண் எதிரியுடையது இல்லை என்றாலும் நான் எதிரி பெயர் கொண்ட வேறொரு நபருக்கு பணத்தை செலுத்தி சிவில் வழக்கு தாக்கல் செய்வதற்கும் அந்த வழக்கை கால வரையறை சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்காக நானே தயார் செய்து அந்த சிவில் வழக்கில் தாக்கல் செய்து அதன் சான்றிட்ட நகலை பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் பெயர் கோபிநாத் என்றால் சரிதான்.

3. மேற்படி அசாஆ 6 வங்கி ரசீதினை யார் பூர்த்தி செய்தது என்றால் என் மகன் பூர்த்தி செய்தார். மேற்படி அசாஆ 6 ஆவணத்தில் N. கோபிநாதன் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு எண் எதிரியுடையது தான். போலிசார் விசாரணையில் மேற்படி அசாஆ 6 ஆவணத்தை சமர்ப்பித்தால் அது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு உண்மை விவரம் தெரியவரும் என்பதால் அதனை மறைத்து இவ்வழக்கின் இறுதி கட்ட விசாரணையில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அசாஆ 6 ல் பணம் செலுத்துபவரின் கையொப்பம் இல்லை என்பதால் மேற்படி ஆவணம் என்னால் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தொகையை செலுத்தியதற்கான வங்கி பரிவர்த்தனையை நான் சமர்ப்பித்துள்ளேன். அசாஆ 6 ஆவணத்தில் கோபிநாதன் என்ற பெயர் உள்ளதால் மேற்படி ஆவணம் எதிரிக்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின் போது எந்த வித ஆவணத்தையும் நான் கொடுக்கவில்லை என்றாலும் தற்போது வழக்கின் இறுதி கட்ட விசாரணையில் மேற்படி ஆவணங்களை பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளதால் மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரிக்கும் போது மேற்படி ஆவணங்களை நான் கொடுத்திருந்தால் அந்த ஆவணங்களை போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பார்கள் என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் மேற்படி ஆவணங்களை காண்பித்தேன். அதன் பின்னர் தான் வழக்கு பதிவு செய்தார்கள். எதிரி என்னிடம் எந்த தொகையையும் வாங்கவில்லை என்றாலும் தாம்பரம் ஓட்டலில் என்னிடம் வாங்கிய பணத்தினை அவர் நீதிமன்றத்தின் மூலம் எனக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் பணத்தை பெற்றுக்கொண்டு செங்கல்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றக்கோரி 1/2021 ல் வழக்கு தாக்கல் செய்து அந்த பணத்தை மீண்டும் மேற்படி நீதிமன்றத்தில் செலுத்திவிட்டு எதிரிக்கு சொந்தமான சொத்தினை அவரிடம் இருந்து எழுதி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.